## திராவிடத்தால் வாழ்கிறோம்

971

எழுத்து: கோவி.லெனின்

ஓவியம்: கி.சொக்கலிங்கம்




-வாழ்வோம்

## ‘மைனாரிட்டி’ தி.மு.க.

மரு.எஸ்.ஏ.எஸ்.ஹபிசுல்லா

30

# காஸாவுக்கு குரல் கொடுக்கும் கழகம்!



தி.மு.க.வுக்கும் சிறுபான்மையினருக்குமான உணர்வுபூர்வமான உறவையும் உரிமைச் செயல்பாடுகளையும் விவரிக்கும் தொடர்

திராவிட இயக்கத்துக்கும் இஸ்லாமியர்களுக்குமான உறவுப் பிணைப்பின் அடிப்படையாக இருந்தவை, மீலாது விழாக்கள். தந்தை பெரியார், பேரறிஞர் அண்ணா, முத்தமிழறிஞர் கலைஞர் ஆகிய திராவிட இயக்கத்தின் முப்பெரும் தலைவரும் மீலாது விழாக்களில் ஆண்டுதோறும் பங்கேற்று வந்திருப்பதை முன்பே குறிப்பிட்டிருக்கிறோம். குறிப்பாக, பேரறிஞர் அண்ணாவை முத்தமிழறிஞர் கலைஞர் முதன்முதலில் சந்தித்தது மீலாது நபி விழாவில்தான். அந்த பந்தத்தின் நீட்சியாக கழகத் தலைவரும் தமிழ்நாடு முதலமைச்சருமான முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் அவர்களும் மீலாது விழாக்களில் கலந்துகொள்வதைக் கடமையாகவே கொண்டிருக்கிறார்.

அந்த வகையில், செப்டம்பர் 21-ஆம் தேதி சென்னை கலைவாணர் அரங்கில், நடைபெற்ற நபிகள் நாயகத்தின் 1,500-வது பிறந்தநாள் விழாவில் கலந்துகொண்டு பேசிய கழகத் தலைவர், இந்தியாவில் சிறுபான்மையினர் நிலை, தமிழ்நாட்டில் அவர்களுக்கு தி.மு.க. அரசு செயல்படுத்தும் திட்டங்கள் பலவற்றைப் பேசினார். அவற்றை விட முக்கியமாக, தமிழ்நாட்டு அளவிலோ, இந்திய அளவிலோ மட்டுமல்ல, உலகின் எந்த மூலை முடுக்கிலும் சிறுபான்மையினருக்கு ஓர் இடர் என்றால், திராவிட முன்னேற்றக் கழகம் முதலில் குரல்கொடுக்கும் என்பதை உணர்த்தும் விதமாக முழங்கினார்.

“காஸாவில் நடத்தப்பட்டு வரும் துயரத்தைப் பார்த்து மனசாட்சியுள்ள எவரும் கவலைப்படாமல் இருக்க முடியாது. இதற்கு விரைவில் தீர்வு ஏற்பட வேண்டும். பாலஸ்தீன மக்கள் எதிர்கொள்ளும் கொடுமைகள் உடனடியாக முடிவுக்கு வர வேண்டும். அதற்கு இந்திய அரசு உறுதியான நடவடிக்கையை மேற்கொள்ள வேண்டும் என்பதை மீண்டும் வலியுறுத்துகிறேன்” எனக் குறிப்பிட்டார்.

காஸாவைப் பற்றிய கழகத் தலைவரின் அக்கறை, இன எதிரிகளுக்கு அமிலத்தை ஊற்றியது போல எரியத் தொடங்கிவிட்டது. சமூக வலைதளங்கள் முதல் தேசிய ஊடகங்கள் வரை, ‘பாலஸ்தீனம் குறித்து தி.மு.க. தலைவருக்கு என்ன அக்கறை?’ எனக் கேள்விகளை எழுப்பத் தொடங்கி இருக்கின்றனர். குறிப்பாக, ‘சட்டமன்றத் தேர்தல் நெருங்குவதால், சிறுபான்மையினர் வாக்குகளைக் கவரும் அரசியல் உத்தியாக காஸா குறித்துப் பேசுகிறார் ஸ்டாலின்’ என்றெல்லாம் பேசுகின்றனர்.

இதுதொடர்பாக, 22.09.2025 அன்று நியூஸ்-18 ஆங்கில சேனலில் நடைபெற்ற விவாதத்தில் நான் பங்கேற்றபோது, என்னிடமும் இதே கேள்வியை எழுப்பினர். “ஈழத் தமிழர் பிரச்சினையை தி.மு.க. பேசினால், தமிழ் அடிப்படைவாதிகள் என்று விமர்சனம் வைப்பார்கள். இஸ்லாமியர்கள் நலன் குறித்துப் பேசினால், சிறுபான்மையினர் வாக்குகளைக் கவரும் முயற்சி என்பார்கள். இந்த விமர்சனங்கள் எங்களுக்குப் புதிதல்ல. ஆனால், தேர்தல் காலகட்டத்தில் பிரதமர் மோடி என்னவெல்லாம் பேசினார்? இந்துப் பெண்களின் தாலிக்கு ஆபத்து, இந்துக்களுக்கு ஆபத்து... ஆபத்து.. என்றார். அப்போது, மோடியின் பேச்சு இந்துக்களின் வாக்குகளைக் கவரும் உத்தி என்று யாரும் கேள்வி எழுப்பவில்லை. தி.மு.க.வை நோக்கித்தான் இத்தகைய கேள்விகள் எழுப்பப்படும். ஆனால், நாங்கள் அதைப்பற்றி கவலைப்படவில்லை. பாதிக்கப்பட்டோரின் பக்கம் நிற்பதே எங்கள் நோக்கம்” என்று பதிலளித்தேன்.

எனவே, தமிழ்நாட்டில் சிறுபான்மையினர் நலனைப் பேணிக் காப்பது மட்டுமல்ல, குடியுரிமை திருத்தச் சட்டம், வக்ஃபு வாரிய திருத்த மசோதா, காஷ்மீர் சிக்கல் என அகில இந்திய அளவில் இஸ்லாமியர்களுக்கு ஏதேனும் சிக்கல் என்றால், திராவிட முன்னேற்றக் கழகம்தான் முதலில் நிற்கும். சர்வதேச அளவில் இஸ்லாமியர்களுக்கு சிக்கல் என்றாலும், இந்தியாவில் முதலில் குரல்கொடுக்கும் கட்சி, திராவிட முன்னேற்றக் கழகம் என்பதை உணர்த்தியுள்ளார் கழகத் தலைவர்.

### ஏன் பாலஸ்தீனத்துக்கு ஆதரவு?

1800-களின் இறுதியில் யூதர்கள் புலம்பெயர்ந்து பாலஸ்தீனில் குடியேறத் தொடங்கினர். இரண்டாம் உலகப் போருக்குப் பின் (1947) ஐநா, பிரிட்டிஷ் ஆட்சியிலிருந்த பாலஸ்தீனத்தை யூத, அரபு இரு நாடுகளாகப் பிரிக்கத் தீர்மானித்தது. யூதர்கள், இஸ்ரேல் நாட்டை அறிவித்தனர்; அரபு நாடுகள் எதிர்த்ததால் 1948-இல் முதல் போர் வெடித்தது. இஸ்ரேல் படைகள் பல பகுதிகளைக் கைப்பற்றின. நூற்றுக்கணக்கான பாலஸ்தீனியர்கள் தங்கள் வீட்டை விட்டு அகதிகளாகிவிட்டனர். 1967-இல் ‘ஆறு நாள் போர்’ மூலம் இஸ்ரேல் மேற்குக் கரை, காஸா, கிழக்கு ஜெருசலேம் உள்ளிட்ட பகுதிகளை ஆக்கிரமித்தது. தற்போது, அங்கிருந்தும் பாலஸ்தீனர்களை விரட்டி, அகதிகளாக வந்தவர்கள் பூர்வீகக் குடிகளை ஒழித்துக்கட்ட குண்டுமழை பொழிந்து கொண்டிருக்கிறார்கள்.

சொந்த நாட்டிலேயே அகதிகளாக உயிர் பிழைக்கப் போராடிக் கொண்டிருக்கிறார்கள் பாலஸ்தீனியர்கள். அவர்களுக்காக மானுடநேயமிக்க தி.மு.கழகம் இங்கிருந்து குரல் எழுப்புகிறது. ஆனால், காஷ்மீர் இஸ்லாமியர்களை தி.மு.க. வாரியணைத்ததையே பொறுத்துக்கொள்ள முடியாதவர்களால், பாலஸ்தீன இஸ்லாமியர்களுக்கான ஆதரவை எப்படிப் பொறுத்துக்கொள்ள இயலும்? அடிப்படையில், தமிழர்களின் ஆரிய எதிர்ப்பும், பாலஸ்தீனிய இஸ்லாமியர்களின் யூத எதிர்ப்பும் ஒரே அடிப்படைகளைக் கொண்டவை.

சாதி, சமய கலப்பில்லாத இந்திய துணைக்கண்டத்துக்குள் ஆரியர்கள் படையெடுத்து நுழைந்த பிறகே, வர்ணாசிரம அடுக்குமுறை நிறுவப்பட்டது. அதுபோலவே, இஸ்ரேலுக்குள் யூதர்கள் நுழைந்த பிறகே, அங்கிருந்து இஸ்லாமியர்கள் விரட்டி அடிக்கப்பட்டனர். இங்கு ஆரியர்கள் நிகழ்த்திய ஒடுக்குமுறைக்கும், அங்கு யூதர்கள் நிகழ்த்திய ஒடுக்குமுறைக்கும் வடிவம்தான் வேறு. நோக்கம் ஒன்றுதான், தங்களுக்கு இருப்பிடமாக அந்த நிலப்பகுதியை மாற்றிக்கொள்ள வேண்டுமென்ற எண்ணம்தான் அங்கு யூதர்களுக்கும், இங்கு ஆரியர்களுக்கும் உண்டானது.

1967-இல் இஸ்ரேல் நிகழ்த்திய 6 நாள் தாக்குதலின்போது, ஆர்.எஸ்.எஸ்.ஸின் அதிகாரபூர்வ இதழான ’ஆர்கனைசர்’ வெளிப்படுத்திய கருத்துகள் இதை உறுதிப்படுத்துகின்றன. ‘இஸ்ரேலியப் படைகள் போரிடுவதை - வெற்றிகளைக் குவித்திருப்பதைப் பார்க்கும்போது, நமது கலாச்சாரமும் வெற்றி பெற்று, உலகில் நம்மைச் சரியான இடத்தில் கொண்டு போய் நிறுத்தப்போகிறது. யூத மதத்தின் கருத்துகள், நமது வேதங்களையும் இந்து தர்ம சாஸ்திரங்களையும் சமூகப் பழக்கவழக்கங்களையும் அடிப்படையாகக் கொண்டிருக்கின்றன” என்று 18.6.67 இதழில் எழுதப்பட்டது.

> “பாலஸ்தீனியர்களுக்கான ஆதரவுக் குரலுக்காகச் சுமத்தப்படும் பழிகள், திராவிட முன்னேற்றக் கழகத்தின் மானுடப் பற்றைப் பறைசாற்றும் பதக்கங்கள்!”

ஆனால், பாலஸ்தீன விடுதலைக்காகப் பொதுக்குழுவில் தீர்மானம் நிறைவேற்றிய இயக்கம், நாடாளுமன்றத்தில் குரல் எழுப்பிய இயக்கம் திராவிட முன்னேற்றக் கழகம். இன்று, நேற்றல்ல... சுயமரியாதை இயக்க காலம்தொட்டே, அடக்குமுறைக்கு ஆளானவர்களின் பக்கம் நிற்பதே அறமாகக் கொண்டு உருவான இயக்கம் இது. எனவே பாலஸ்தீனியர்களுக்கான ஆதரவுக் குரலுக்காகச் சுமத்தப்படும் பழிகள், திராவிட முன்னேற்றக் கழகத்தின் மானுடப் பற்றைப் பறைசாற்றும் பதக்கங்கள்!

...நீளும்

## இஸ்ரேலுக்கு வலுக்கும் எதிர்ப்பு!

காஸாவில் பச்சிளங் குழந்தைகள்கூட, இஸ்ரேல் படைகளால் நாளுக்கு நாள் கொல்லப்பட்டு, உலக அரங்கை அதிரச் செய்து கொண்டிருக்கிறது. இஸ்ரேலின் இந்த இரக்கமற்ற செயலுக்கு எதிராக உலகெங்கும் கண்டனங்கள் வலுத்து வருகின்றன. பிரிட்டன், கனடா, ஆஸ்திரேலியா, பிரான்ஸ், போர்ச்சுக்கல், பெல்ஜியம், லக்சம்பர்க், மால்டா, மொனாகோ, அண்டோரா உள்ளிட்ட நாடுகள் பாலஸ்தீனத்தின் மீதான இஸ்ரேலின் தாக்குதலை உடனடியாக நிறுத்த வேண்டும் என்றும், பாலஸ்தீனத்தை நாடாக அங்கீகரிக்க வேண்டுமென்றும் வலியுறுத்தி உள்ளன.

இந்தியாவைப் பொறுத்தவரையில், பிரதமர் மோடி தலைமையிலான பா.ஜ.க. அரசு இஸ்ரேலை வெளிப்படையாக இதுவரை கண்டிக்கவில்லை. போர்ச்சூழலைக் கைவிட்டு, அமைதியை நிலைநாட்டவும் இஸ்ரேலையோ அல்லது சர்வதேச சமூகத்தையோ இதுவரை வலியுறுத்தவில்லை. ஆனால், தமிழ்நாட்டின் முதலமைச்சர் முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின், இந்தியத் துணைக்கண்டத்துக்கு முன்மாதிரியாக, காஸாவில் நிகழ்த்தப்பட்டு வரும் படுகொலைகளை வெளிப்படையாகக் கண்டித்தார். பாலஸ்தீனத்துக்கு ஆதரவாக, பெரியாரிய உணர்வாளர்கள் கூட்டமைப்பு சார்பில், செப்டம்பர் 20-ஆம் தேதி சென்னையில் பேரணி ஒன்றும் நடத்தப்பட்டது.

இப்படி, உலகெங்கும் உருவாகி வரும் இஸ்ரேலுக்கு எதிரான எதிர்ப்புகள், இத்தாலியில் பெரும் போராட்டக் களமாக மாறியிருக்கிறது. இத்தாலியின் பல்வேறு நகரங்களில் இளைஞர்கள் பல்லாயிரக்கணக்கானோர் கூடி, இஸ்ரேல் மீது நடவடிக்கை எடுக்க வலியுறுத்தி உள்ளனர். இஸ்ரேலுக்கான ஆயுத ஏற்றுமதியை தடை செய்ய வேண்டும், காஸா மீதான தாக்குதலை நிறுத்த வேண்டும், பாலஸ்தீனத்தை அங்கீகரிக்க வேண்டும் என்று இத்தாலியின் வீதிகளில் முழங்கிய முழக்கங்கள் சர்வதேச சமூகத்தின் அமைதியைக் கலைத்திருக்கின்றன.

பாலஸ்தீனம் பாதுகாக்கப்படட்டும்; போரில்லா உலகம் அமையட்டும்!

## ஃப்ளாஷ்பேக்





சாத்தூர் பி.எஸ்.கே.சேதுபதி

### தலைவரின் பிறந்தநாளில்...

2014-ஆம் ஆண்டு, சென்னை, ஒய்.எம்.சி.ஏ. திடலில், இன்றைய கழகத் தலைவர், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் பிறந்தநாள் விழா நடைபெற்றது. நிகழ்ச்சியின்போது, எனது கழகப் பணியை அறிந்த, அன்றைய இளைஞர் அணி மாநிலத் துணைச் செயலாளர், இன்றைய மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் அவர்கள், ‘வாடா தம்பி’ என என்னை வாஞ்சையுடன் அழைத்துச்சென்று தளபதி அவர்களிடத்தில் அறிமுகம்செய்து, பிறந்தநாள் வாழ்த்துத் தெரிவிக்க வைத்தார். அந்த நொடிகளை இப்போது நினைத்தாலும், நெஞ்சம் நெகிழ வைக்கும்.

– சாத்தூர் பி.எஸ்.கே.சேதுபதி,
முன்னாள் ஒன்றிய இளைஞர் அணி துணை அமைப்பாளர்,
இராஜசிங்கமங்கலம், இராமநாதபுரம்.

இது போன்ற அரிய புகைப்படங்களைச் சிறுகுறிப்புடன் எங்களுக்கு அனுப்புங்கள். அலைபேசி எண் அவசியம்.
அனுப்ப வேண்டிய முகவரி: அன்பகம், 614, அண்ணா சாலை, தேனாம்பேட்டை, சென்னை - 600 018.
வாட்ஸ்அப் எண் : 90033-24473 மின்னஞ்சல்: youthwing@dmk.in

## கருவூலம்

### கர்நாடகா ஆந்திராவிலும் கருப்புக்கொடி!

1965-ஆம் ஆண்டு, இந்தித் திணிப்புக்கு எதிராக, அந்த ஆண்டு குடியரசு நாளை, துக்க நாளாக அறிவித்து, அறப்போரை அறிவித்திருந்தது கழகம். கர்நாடக மாநிலத்தில் துக்க நாள் அனுசரித்த எஸ்.கே.உசேன் தலைமையிலான கழகத்தினர் 26 பேர் கைது செய்யப்பட்டனர். ஆந்திராவிலும் கேரளத்திலும் கழகத்தினர் இல்லங்களில் கருப்புக்கொடிகளை ஏற்றி, கருப்புத் தோரணங்களைக் கட்டி இருந்தனர்.

RNI 1244/57 - Postal Reg.No.MA/43/2024-2026.Licenced to post under without pre payment of postage vide No.TN/WPP-94/SR/2024-2026 Published by Karthikeyan Shanmugasundaram on behalf of Murasoli Trust from No:180, Kodambakkam High Road, Chennai - 600 034 and Printed by D.Karthikeyan at Dinakaran Press, No.2/2, Melur Main Road, Uthangudi, Madurai - 625 107. Editor: Karthikeyan Shanmugasundaram, Regn.No.7436, Ph:044-2817 9191, 2817 9131 Fax: 2817 9292.